திட்டங்கள் அனுப்பப்படவில்லை என்றும் திட்டக் குழுவிலே உள்ளவர்கள் கூறியதாகத் தெரிகிறது. அப்படியிருந்தால், அனுப்பாமல் இருந்ததற்கான காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியான திட்டங்கள் கேட்கப்படவில்லை. அதற்காகத்தான் அவர்களுக்குப் பதிலளிக்கவில்லை என்று முதல் கேள்விக்குப் பதிலளித்தேன். நகரத்திலும் மற்றப் பஞ்சாயத்துக்களிலும் இருக்கக்கூடிய திட்டங்களை எடுத்து ஒன்றாகச் சேர்த்து, பல துறைகளில் ஒதுக்கப்படுகிற பணத்தை ஒன்று சேர்த்து, அதற்கேற்ற வகையில் திட்டம் வகுக்கும்படி அவர்கள் கேட்டிருந்தார்கள். அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே செய்ய இயலாத காரணத்தினால், அதை இப்பொழுது செய்ய இயலாது என்று திட்டக் கமிஷனுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இந்த அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ளது.

பாரத் சேவக் சமாஜம்

* 308 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :
திரு. நா. ராஜாங்கம் : } : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) நமது மாநிலத்தில், பாரத் சேவக் சமாஜத்தின் கிளைகள் எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

(இ) அவைகளின் நோக்கம் என்ன ?

(உ) அவைகளுக்கு மாநில அரசாங்கம் நிதி உதவி ஏதேனும் அளித்து வருகிறதா ?

(எ) அவைகளின் வருடாந்திரக் கணக்குகள் மாநில அரசாங்கத்தால் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றனவா ?

கனம் திரு. கோ. பூவராகன்: சபைமுன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த சமாஜத்திற்கு நமது சர்க்கார் இதுவரை எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள்? இந்த சமாஜத்தின் கணக்குகள் நமது சர்க்காரால் தணிக்கை செய்யப்பட்டிருந்தால், அந்தத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் விவரம் சபை உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : மொத்தமாக இதுவரை எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதற்கான விவரம் இப்பொழுது இல்லை. ஆண்டுதோறும் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கான விவரம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு என்னிடம் இருக்கிறது. 1963-64-இல் ரூ. 7,500 கொடுத்திருக்கிறார்கள். 1964-65 இல்

---

a 113–114-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

5th November 1965]

ரூ. 6,000 கொடுத்திருக்கிறார்கள். 1965-66-இல் ரூ. 3,000 கொடுத்திருக்கிறார்கள். கணக்குகள் எல்லாம் தணிக்கை செய்யப்படுகின்றன

சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட மானியம், கடன்

*309 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னை மாநகராட்சிக்கு 1963-64-ல் வழங்கிய மானியத் தொகை எவ்வளவு, கடன் தொகை எவ்வளவு?

(இ) சென்னை மாநகராட்சியிடமிருந்து அதே ஆண்டில் பழைய பாக்கிக்காகவும் வட்டிக்காகவும் வசூலிக்கப்பட்ட தொகை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) (i) மானியம் ரூ. 45,35,677.

(ii) கடன் ரூ. 1,46,82,000.

(இ) (i) அசலுக்காக ரூ. 37,27,527.

(ii) வட்டிக்காக ரூ. 29,72,072.

Mofussil bus stand at Broadway

*310 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state :—

(a) whether there is any proposal under consideration of the Government to take over the Broadway mofussil bus stand from the Madras City Corporation with a view to construct a new bus stand with all facilities; and

(b) if so, the details thereof?

THE HON. SRI G. BHUVARAHAN: (a) Yes.

(b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன்: பிராட்வே பஸ் நிலையத்தைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டால், அதைப் பல மாடிகள் கொண்ட பஸ் நிலையமாக ஆக்கிவிடமுடியும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு சமயம் கூறியிருக்கிறார்கள். மாநகராட்சிக்குக் கடன் கொடுத்து, பல மாடிக் கட்டடத்தை அரசாங்கமே கட்டி, மாநகராட்சிக்கு ஒப்படைத்தால் மாநகராட்சிக்கு வருமானம் இருக்கும், பொதுமக்களுக்கும் வசதி இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: இதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.